www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

V11His

விருதுநகர் மாவட்டம்

011159

இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2024

-----

வகுப்பு 11

நேரம் : 1.30 மணி

வரலாறு

மதிப்பெண்கள்: 50

பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

I. கொடுக்கப்பட்டுள்ள நான்கு மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்: 10×1=10

1) ............. என்ற நூலை கங்காதேவி எழுதினார்.

அ) மனுசரிதம் ஆ) ஆமுக்தமால்யதா

இ) பாண்டுரங்க மகாத்மியம் ஈ) மதுரா விஜயம்

2) முகமது கவான் ஒரு மதரசாவை நிறுவி அதில் 3000 கையெழுத்து நூல்களை வைத்திருந்த இடம் .............

அ) பெரார் ஆ) பீஜப்பூர் இ) பீடார் ஈ) அகமதுநகர்

3) கூற்று : பாபர் முதலாம் பானிப்பட் போரில் வெற்றி பெற்றார்.

காரணம் : பாபர் பீரங்கிப் படையை போரில் பயன்படுத்தினார்.

அ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் ஆகும்.

ஆ) கூற்று தவறு; காரணம் சரி.

இ) கூற்று தவறு; காரணமும் தவறு.

ஈ) கூற்று சரி; காரணம் கூற்றின் சரியான விளக்கம் அல்ல.

4) பொருத்துக:

| | | | |
|---|---|---|---|
| i) | அபுல் பாசல் | - | 1. ஔரங்கசீப் |
| ii) | ஜும்மா மசூதி | - | 2. அக்பர் |
| iii) | பாதுசாஹி மசூதி | - | 3. ஷெர்ஷா |
| iv) | புராண கிலா | - | 4. ஷாஜஹான் |

அ) 2, 4, 1, 3 ஆ) 3, 2, 1, 4 இ) 3, 1, 4, 2 ஈ) 1, 3, 2, 4

5) சிவாஜியின் ஆலோசனை சபை ............. என்று அழைக்கப்பட்டது.

அ) அஷ்டபிரதானம் ஆ) அஷ்டதிக்கஜங்கள்

இ) நவரத்தினங்கள் ஈ) பஞ்சபாண்டவர்கள்

6) ............. உடன்படிக்கை முதலாம் ஆங்கிலோ - மராத்தியப் போரை முடிவுக்குக் கொண்டு வந்தது.

அ) மதராஸ் உடன்படிக்கை ஆ) பூனா உடன்படிக்கை

இ) சால்பை உடன்படிக்கை ஈ) பேசின் உடன்படிக்கை

7) ஆங்கிலேயர் 1639 ஆம் ஆண்டு உள்ளூர் ஆட்சியாளரிடமிருந்து பெற்ற நிலத்தில் ............. கோட்டையைக் கட்டினர்.

அ) புனித ஜார்ஜ் கோட்டை ஆ) வில்லியம் கோட்டை

இ) வேலூர் கோட்டை ஈ) கோல்கொண்டா கோட்டை

8) நீலநீர்க்கொள்கையுடன் தொடர்புடையவர் .............

அ) பிரான்சிஸ்கோ டி அல்மெய்டா ஆ) அல்போன்ஸோ டி அல்புகர்க்

இ) நீனோ டா குன்கா ஈ) ஆன்டோனியோ டி நாரான்கா

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



9) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு:

(i) அல்புகர்க் இந்தியாவில் போர்த்துக்கீசியப் பேரரசை உண்மையில் நிறுவியவர் ஆவார்.

(ii) உடன்கட்டை ஏறும் வழக்கத்தை நிறுத்த அல்புகர்க் முயன்றார்.

அ) (i) சரி ஆ) (ii) தவறு இ) இரண்டும் சரி ஈ) இரண்டும் தவறு

10) ஆந்திர போஜா, அபினவா போஜா, ஆந்திர பிதாமகா என்று போற்றப்படும் விஜயநகர அரசர் ............ ஆவார்.

அ) இரண்டாம்தேவராயர் ஆ) சாளுவ நரசிம்மர்

இ) கிருஷ்ணதேவராயர் ஈ) திருமலை

## பகுதி - II

**II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **5×2=10**

**வினா எண் 17க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

11) விஜயநகரைப் பற்றி அறிய உதவும் தொல்லியல் சான்றுகள் யாவை?

12) புரந்தர் உடன்படிக்கையின் ஷரத்துக்கள் யாவை?

13) சரஸ்வதி மஹால் நூலகம் பற்றி ஒரு குறிப்பு வரைக.

14) "சராப்" மற்றும் "உண்டியல்" பற்றி நீ அறிவன யாவை?

15) "கார்டஸ் (Cartaz) முறை" என்றால் என்ன?

16) "ஜஹாங்கீரின் அரியணைக்குப் பின்னால் அதிகார மையமாகச் செயல்பட்டவர் நூர்ஜஹான்" - விளக்குக.

17) குருநானக் பற்றி நீவிர் அறிவது யாது?

## பகுதி - III

**III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்கவும்:** **5×3=15**

**வினா எண் 24-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

18) ராக்சஷி தங்கடி போர்

19) கபீரின் போதனைகளை விவரி.

20) "தீன் இலாஹி" பற்றி நீவிர் அறிவது யாது?

21) அக்பரது மன்சப்தாரி முறை

22) நயங்காரா முறை

23) "ஆனந்தரங்கர் நாட்குறிப்பு"

24) இருட்டறைத் துயரம்

## பகுதி - IV

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **3×5=15**

25) அ) பக்தி இயக்கத்தின் விளைவுகளைச் சுட்டிக் காட்டுக.

**(அல்லது)**

ஆ) முகலாயக் கட்டடக் கலையின் சிறப்பம்சங்களைப் பற்றி ஒரு கட்டுரை வரைக.

26) அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் அக்பர் பேரரசின் எல்லையை வரைந்து பின்னர் கீழ்க்கண்ட இடங்களைக் குறிக்கவும்.

(i) பானிப்பட் (ii) ஆக்ரா (iii) கோண்டுவானா

**(அல்லது)**

ஆ) சிவாஜியின் இராணுவ அமைப்பு அவரது வெற்றிக்கு எவ்வாறு வழிவகுத்தது?

27) அ) ஐரோப்பியரின் இந்திய வருகை சார்ந்து ஏதேனும் ஐந்து நிகழ்வுகளுக்கு காலக்கோடு வரைக.

**(அல்லது)**

ஆ) ஆங்கிலக் கிழக்கிந்தியக் கம்பெனி மதராஸ், பம்பாய், கல்கத்தா ஆகிய இடங்களில் வணிகம் செய்யும் உரிமையை எவ்வாறு நிலைநாட்டியது?

----------

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com